செய்தி வெளியீடு எண்: 895 நாள்: 10.12.2018

## செய்தி வெளியீடு

## சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை

## கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சி

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறையின் கீழ் கண்காணிப்பாளர், விரிவாக்க அலுவலர் (ச.ந), ஊர் நல அலுவலர் (மகளிர்), உதவியாளர், ஓட்டுநர், அலுவலக உதவியாளர் மற்றும் சத்துணவு அமைப்பாளர், சமையலர், சமையல் உதவியாளர் ஆகிய பணியிடங்களில் பணிபுரிந்து பணியிடையே காலமானோர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் வழங்க அரசாணை வழங்கப்பட்டுள்ளது. அதனை பின்பற்றி இன்று (10.12.2018) 33 இளநிலை உதவியாளர் (ம) ஒரு தட்டச்சர் பணியிடங்கள் ரூ.19,500–62,000/– என்ற ஊதிய விகிதத்திலும், 10 சத்துணவு அமைப்பாளர் பணியிடங்கள் ரூ.7700–24200/– என்ற ஊதிய விகிதத்திலும், 6 சத்துணவு சமையலர் பணியிடங்கள் ரூ.4100–12500/– என்ற ஊதிய விகிதத்திலும், 7 சமையல் உதவியாளர் பணியிடங்கள் ரூ.3000–9000/–என்ற ஊதிய விகிதத்திலும் கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகள் மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் Dr. V. சரோஜா அவர்களால் வழங்கப்பட்டது. சமூக நலத் துறை ஆணையர் திருமதி. V. அமுதவல்லி, இ.ஆ.ப., மற்றும் சமூக நலத்துறை உயர் அலுவலர்கள் மேற்படி விழாவில் கலந்து கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9